# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.89 of 2025
Prosecution Witness No.P.W.6 (L.W.10)

| | |
|---|---|
| Name | **நரசிம்மன்** |
| Father/Husband Name | **ராஜகோபால்** |
| Calling/Occupation | **உதவி ஆய்வாளர் (ஓய்வு)** |
| Age | 62 |
| Address | **வேலூர்.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.02.2026.

(A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது வேலூர் தொரப்பாடியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு நான் வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 26.05.2023 அன்று நான் நிலைய அஜரில் இருந்தபோது வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலினை பெற்று வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த திரு.குமரன்

வயது 23, த/பெ. ஏகாம்பரம், மாரியம்மன் கோவில் தெரு, சின்னப்பாலம்பாக்கம் கிராமம், வேலூர் என்பவரை காலை 07.00 மணிக்கு விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமுலத்தை பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண் 145/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இ.த.ச மற்றும் 307 இ.த.ச–ன்படி 26.05.2023 அன்று காலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்து ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மருத்துவமனையிலிருந்து தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்ற விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. தகவல் கிடைத்த நேரம் காலை சுமார் 07.00 மணி இருக்கும். முதல் தகவல் அறிக்கையில் சூரி கத்தி என்று ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கடைசி வரியில் அசிங்கமாக பேசி கத்தியால் குத்தி மிரட்டிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

சூரி கத்தி என்பதும் கத்தி என்பதும் வேறு வேறு என்றால் சரிதான். சூரி கத்தியைத்தான் கத்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோபி கார்த்திக் த/பெ. சம்பத், மேட்டு தெரு, குன்னத்தூர் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரணி தாலுக்காவில் ஒரு குன்னத்தூரும், போளூர் தாலுக்காவில் ஒரு குன்னத்தூரும் உள்ளது என்றால் இது கண்ணமங்கலம் குன்னத்தூர் ஆகும். மற்ற இரண்டு எதிரிகளின் தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் கடைசி பக்கத்தில் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் எழுதும்போது கை தவறுதலாக எழுதப்பட்டுள்ளது ஆனால் கடைசி வரியில் தேதி சரியாக குறிப்பிட்டுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் சம்பவத்தன்று முதன்முதலாக எந்த நபர் வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. அரசு தரப்பு சாட்சி குமரன் தன்னுடைய சாட்சியத்தில் காயம்பட்ட நபரான அவர் விடியற்காலை 04.45 மணிக்கு மருத்துவ ஆலோசனைக்கு எதிராக சென்றுவிட்டார் என்றும் அதனால் காலை 07.00 மணிக்கு நான் புகார் வாக்குமூலம் பதிவு செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னை எங்கு விசாரித்தார் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.02.18 17:08:10 +0530